**திரு. மு. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் ஊராட்சி ஒன்றியத்தில் புதிதாக, இந்தப் பஞ்சாயத்து தேர்தலின்போது தான் ஏற்படுத்தப்பட்ட செட்டிச் சாவடி என்ற பஞ்சாயத்தில் எந்தவித வருமானமும் இல்லை. குவாரி மட்டும்தான்—வெள்ளைக்கல்—மாக்னசைட் எடுக்கக்கூடிய சுரங்கம் மட்டும்தான்—வைத்துள்ளார்கள். ஒரு தனியார் கம்பெனி உச்ச நீதிமன்றத்தில் தடை வாங்கி விட்டதால், பஞ்சாயத்திற்கு சர்சார்ஜும் ராயல்டியும் வருவதில்லை. அதனால் அந்தப் பஞ்சாயத்துக்கு வருமானமே இல்லாமல், இப்போது மின் விளக்குகள் எல்லாம் எரியாத நிலை இருக்கிறது. ஆகவே, வருமானமே இல்லாத அந்தப் பஞ்சாயத்துக்கு ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து நிதி உதவி செய்ய அரசு முன்வருமா என்று அமைச்சரைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து, இன்றைக்கு அரசாங்கத்தில் என்ன செய்ய முடியுமோ அவற்றை அரசு செய்யும்.

**இயந்திர கம்போஸ்ட் உர ஆலைக்கு மத்திய அரசின் மானியம்**

4—(*வினா எண். 9092)—**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மத்திய அரசின் விவசாய இலாக்கா இயந்திர கம்போஸ்ட் உர ஆலைகள் (மெக்கானிக்கல் காம்போஸ்ட் பெர்டிலைசர் பிளாண்ட்) நிறுவுவதற்காக திட்ட செலவில் 11 சதவீதத்தை மானியமாக நகராட்சிகளுக்கு வழங்குகிறதா?

(ஆ) சென்னை மாநகராட்சி இந்த உதவியைப் பெற்றுள்ளதா?

(இ) மாநில அரசு ஏதும் உதவியுள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ):—ஆம். அரசு ஆணை எண் பல்வகை 817, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை, நாள் 20—5—1980-ல் சென்னை மாநகராட்சியில் ரூபாய் 70.64 இலட்சம் மதிப்பீட்டில் இயந்திர உர ஆலை ஒன்றினை அமைப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டது. இதற்கு மத்திய அரசு ரூபாய் 7,84,888-ம், மாநில அரசு ரூபாய் 15,69,112-ம் மானியமாக வழங்கியது. மாநில அரசு மேலும் இத்திட்டத்திற்கு ரூபாய் 23.55 இலட்சங்கள் கடனாக மாநகராட்சிக்கு வழங்கி

உள்ளது. இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்த சாத்தியக் கூறுகள் இல்லாதபடியினால் இத்திட்டத்தைக் கைவிடுவதென அரசு தற்போது முடிவு எடுத்துள்ளது.

(முற்பகல் 9-20)

திரு. வி. பி. சிந்தன் : தலைவரவர்களே, மாநகராட்சியினுடைய திறமை வாய்ந்த சில பொறியாளர்கள். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சாத்தியமானது என்றும் இதை இலாபகரமாக நடத்த முடியும் என்றும் அரசுக்கும் நிர்வாகத்திற்கும் பரிந்துரை அளித்திருப்பதாகக் கூறப்படுவது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே இருக்கின்ற தகவல்படி இது சாத்தியமானது அல்ல. அவர்கள் பரிசீலனை செய்திருக்லாம். ஆனால் அரசு ஒட்டு மொத்தமாக எல்லாத் தகவல்களையும் எடுத்து ஆராய்ந்த பின்னால், இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட முடியாத ஒன்று என்று தீர்க்கமாக முடிவெடுத்திருக்கிறது.

திரு. வி. பி. சிந்தன்: தலைவரவர்களே, இது தனியார் துறைக்கு விடப்படுவதற்கான ஆலோசனை ஏதேனும் அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, ஏற்கெனவே நான் தெரிவித்தபடி இந்தத் திட்டம் இப்போது கைவிடப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இந்தத் திட்டம் மாநில அரசுக்கு அனுப்பப்பட்டு மத்திய அரசுக்கும் அனுப்பப்பட்டு, இரண்டு அரசுகளும் மானியமும் கடனும் வழங்கிய பின்னால் சாத்தியக்கூறு இல்லை என்று சொல்வது விந்தையாக இருக்கிறது; வேடிக்கையாக இருக்கிறது. இந்தத் திட்டத்தை ஆராய்வதற்கு முன்னால், உதவிகள் வழங்கப்படுவதற்குமுன்னால் ஏன் இதுபற்றி எண்ணிப்பார்க்கப்படவில்லை? மாநில மத்திய அரசுகள் ஒப்புதல் அளித்த பின்னால் இத்தகைய சூழ்நிலை ஏற்படுவதற்கு என்ன காரணம் ? இந்தத் திட்டத்தை மீண்டும் எடுத்து நடத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே ஒரு கருத்தை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இயந்திர கம்போஸ்ட் உர ஆலைகள் (Mech nical Compost Fer:ilizer Plants.) நிறுவப்படுவது என்பது இந்த அரசு எடுத்த முடிவல்ல. 1975ஆம்

ஆண்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டு, 5 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே திட்டம் உருவாக்கப்பட்டு, கடந்த 11 ஆண்டு களாக எண்ணி எண்ணிப் பார்த்து, திருத்தி, திருத்திப்பார்த்து, பல ஆட்சிகள் இதனைக் கண்டிருக்கின்றன. இது அவர்கள் பெற்றெடுத்தக் குழந்தை. எனவே, இது வாழாது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) 11 ஆண்டுகளாக இதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் மற்ற விவரங்களைச் சேகரித் துத் தரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சைதை சா. துரைசாமி: தலைவரவர்களே, சென்னை மாநகரில் நாள்தோறும் எடுத்துக் கொண்டிருக்கிற குப்பைகளை வைத்து இந்த உரத் தொழிற்சாலையைத் தொடங்க முதலிலே என் தொகுதியில் அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னால், இது வேளச்சேரிக்கு மாற்றப்பட்டது. குப்பையைக் கொட்டக் கூட இடம் இல்லாத நிலையில் அரசு மறுபரிசீலனை செய்து, இந்தத் தொழிற்சாலையைத் தொடங்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அடிப்படையில் குப்பைகள் இன்றைக்குத் தீவிரமாக அழிக்கப்பட வேண்டியவை என்பதிலே இந்த அரசு கண்ணுங்கருத்துமாக இருக்கிறது. இதற்கு வேறு வகையிலே தீவிரமாக அரசு தீர்வு காண இருக்கிறது.

தஞ்சாவூர் ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல்

5—(*வினா எண். 9145)— திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டத்தில் உள்ள தஞ்சாவூர், ஒரத்தநாடு போன்ற பெரிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து புதிய ஈச்சங் கோட்டை ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தஞ்சாவூர், ஒரத்தநாடு ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களையும் பிரித்து ஈச்சங்கோட்டை என்கின்ற புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்க கோரிக்கை வந்துள்ளது.

(ஆ) தஞ்சை மாவட்ட ஆட்சியர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆகியோரின் செயற்குறிப்பு பெற்றபின் அரசு தக்க முடிவு எடுக்கும்.